## நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு, மெட்ராஸ் உயர்நீதிமன்றம், சென்னை
## (JUDICIAL RECRUITMENT CELL, HIGH COURT, MADRAS)

அறிவிக்கை எண். 208/2022 தேதி: 24.07.2022

மாவட்டத்தின் பெயர்: **வேலூர் (இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் உட்பட)**

| | |
|---|---|
| அறிவிக்கை தேதி | 24.07.2022 |
| இணையதளம் வாயிலாக பதிவு செய்ய, பதிவு கட்டணம் செலுத்த, விண்ணப்பம் சமர்ப்பிக்க மற்றும் தேர்வு கட்டணம் செலுத்த கடைசி தேதி. (இணைய தளம் மூலமாக மட்டுமே கட்டணம் செலுத்தப்பட வேண்டும். இணையதளம் அல்லாத முறைகளில் கட்டணம் செலுத்த அனுமதி இல்லை) | 22.08.2022 |

தமிழகத்தில் உள்ள **வேலூர் (இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் உட்பட)** நீதித்துறை மாவட்ட சார்நிலை நீதித்துறை பணிக்கு **"ஓட்டுநர்"** பதவிக்கான நேரடித் தேர்விற்கு இணையதளம் வாயிலாக மட்டுமே, தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கவனம்**

- மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவின் அனைத்து ஆட்சேர்ப்புகளும் தகுதியின் அடிப்படையிலேயே நடத்தப்படுகிறது.
- நேர்மையற்ற முறையில் வேலை வாங்கித்தருவதாக உறுதி அளித்து ஏமாற்றும் மோசடியாளர்கள் மற்றும் தரகர்களிடமிருந்து விண்ணப்பதாரர்கள் தங்களை காத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- அவ்வாறான நேர்மையற்ற நபர்களால் விண்ணப்பதாரர் பாதிக்கப்பட்டு அதனால் அவர்களுக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களுக்கு வேலூர் மாவட்ட நீதித்துறையும், மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவும் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

- விண்ணப்பதாரர் அவ்வாறான நியாயமற்ற முறையில் வேலை பெறுவதற்கு நேரடியாகவோ அல்லது வேறு நபர் வாயிலாகவோ ஆட்சேர்ப்பு அமைப்பை அணுகினால் அவர் வேலை பெறும் தகுதியை இழந்துவிடுவார்.
- இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விவரங்களுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பாவார். விண்ணப்பதாரர்கள் இறுதியாக விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பு, தாங்கள் பூர்த்தி செய்த விண்ணப்பத்தை ஒருமுறை சரிபார்த்து அதன்பின் சமர்ப்பிக்கவும். இணையதள விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது, தவறுகள் ஏற்படின் அதற்கு இணையதள சேவையகம்/ பொது சேவை மையங்கள் உள்ளிட்ட சேவை வழங்குவோரை குறை கூற இயலாது.

**குறிப்பு:**

**பார்வையற்றவர்கள் மற்றும் பார்வை திறன் குறைபாடு உடையவர்கள் மேற்கூறிய பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.**

**[பார்வை: 15.06.2021-ம் தேதியிட்ட அரசாணை(நிலை) எண்.225 உள்(நீதிமன்றம்-5) துறை]**

**விண்ணப்பதாரர்களுக்கு முக்கிய தகவல்**

| | |
|---|---|
| அ | ரேணு மற்றும் பலர் -எதிர்- மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, டிஸ் ஹசாரி [(2014) 14 SCC 50)] என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவின் படி தமிழ்நாடு அரசு 25.10.2018ம் தேதியிட்ட அ.ஆ.நிலை.எண்.2121, உள்துறை (நீதிமன்றம்-1) என்ற அரசு ஆணையில் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் நீதித்துறைக்கு ஆட்சேர்ப்பு பிரிவு உருவாக்க அனுமதி வழங்கியுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஆளுகைக்கு உட்படாத தமிழ்நாட்டில் உள்ள கீழமை நீதித்துறையின் இதர பணிக்கான பணியாளர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காக “தடையின்மை சான்றையும்” வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவானது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆளுகைக்குட்படாத கீழமை நீதிமன்ற பணிகளுக்கான பணியாளர்களை நேரடியாக தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளை பல்வேறு அறிவிப்புகளின் வாயிலாக துவங்கியுள்ளது. |
| ஆ | ஏற்கனவே அந்தந்த மாவட்ட முதன்மை நீதிபதிகள்/நியமனம் செய்யும் அலுவலர்கள் வெளியிட்ட ஆட்சேர்ப்பு அறிவிப்புகளுக்கு |

| | |
|---|---|
| | விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பித்தபின் தேர்வு நடவடிக்கைகளில் கலந்து கொண்டவர்களும், தற்போது தகுதி இருப்பின் இந்தப்பணிக்கு புதிதாக விண்ணப்பிக்க வேண்டும். அவர்கள் ஏற்கனவே இப்பதவிக்கு அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் எந்த உரிமையோ/வயது வரம்பில் தளர்வோ/ சமநிலை கோரவோ முடியாது. |
| இ | https://www.mhc.tn.gov.in என்ற முகவரியில் சமர்பிக்கப்படும் இணையவழி விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். வேறெந்த முறையிலாவது, அதாவது தபால், கூரியர், பதிவுத் தபால், மின்னஞ்சல் போன்றவை மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்த சூழ்நிலையிலும், எந்த காரணத்திற்காகவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இது சம்மந்தமாக விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் எந்த ஒரு கடிதப் பரிமாற்றமும் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. |
| ஈ | விண்ணப்பதாரர்கள் கணினி அல்லது மடிக்கணினியின் வாயிலாக மட்டுமே இணையத்தளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். அலைபேசி (Cellular Phone) அல்லது வரைபட்டிகை (Tab) இன் மூலம் விண்ணப்பிக்க இயலாது. ஏனெனில் விண்ணப்பப் படிவம் கணினி மற்றும் மடிக்கணினியின் வாயிலாக மட்டுமே பதிவு செய்ய ஏதுவாக இருக்கும். |
| உ | அனைத்து தரப்பு விண்ணப்பதாரர்களும் (கட்டணம் விலக்களிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உட்பட) விண்ணப்பம் பதிவு செய்வதற்கான கட்டணம் ரூ.60/-ஐ (அறுபது ரூபாய் மட்டும்) + பொருந்தக்கூடிய கட்டணங்களை செலுத்தி), மாவட்ட வாரியான நீதித்துறை அறிவிக்கைகளுக்கு தங்களது அடிப்படை விவரங்களை பதிவு செய்வது கட்டாயமாகும். அதன்பின் ஓட்டுநர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தை செலுத்தவேண்டும். இருப்பினும் விலக்களிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தேர்வு கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. |
| ஊ | பதிவு செய்வதும் மற்றும் பதிவு கட்டணம் செலுத்துவதும் மட்டுமே ஒரு பதவிக்கு விண்ணப்பித்ததாக ஆகிவிடாது. வேலைவாய்ப்புக்கான விண்ணப்பத்தில், தவறான மற்றும் முழுமையற்ற தகவல்களை கொடுப்பது அல்லது தேவையான விவரங்களை கொடுக்காமலிருப்பது |

| | |
|---|---|
| | போன்றவற்றால் ஏற்படும் விளைவுகளுக்கு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் ஆட்சேர்ப்பு பிரிவோ அல்லது வேலூர் மாவட்ட நீதித்துறையோ எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. |
| எ | தமிழ்நாட்டை சேர்ந்த ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்கள்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்கள்) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அந்தந்த வகுப்பினர்களாக கருதப்படுவார்கள். மற்ற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை (அதாவது தமிழ்நாட்டினைத் தவிர) சேர்ந்தவர்கள், அவர்களுடைய மாநிலங்களில் அல்லது யூனியன் பிரதேசங்களில் இட ஒதுக்கீடு கோர தகுதியான வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்றே கருதப்படுவர். எனவே அவர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் வயது வரம்பில் தளர்வு அல்லது நியமனத்தில் முன்னுரிமை அல்லது கட்டணத்தில் தளர்வு என எச்சலுகைகளையும் கோர இயலாது. அவர்கள் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்யும்போது 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்று தேர்வு செய்து தேவையான கட்டணத்தை செலுத்தி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். **மற்ற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் (தமிழ்நாட்டினைத் தவிர) அவரவர்கள் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் அவர்களுடைய வகுப்பினை குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ள தேர்வுக் கட்டணத்தை செலுத்தாதிருந்தாலோ அல்லது வயது வரம்பு கடந்தவர்களாக இருந்தாலோ அவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இது சம்மந்தமாக எந்த ஒரு கடிதப்பரிமாற்றமும் எந்தச் சூழ்நிலையிலும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.** |
| ஏ | விண்ணப்பதாரர் எவரேனும் உண்மையை மறைத்தோ/ அல்லது தவறான தகவல் அளித்தோ இந்த பதவிக்கு விண்ணப்பித்திருந்தால், அவர் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் கலந்து கொள்ளும் தகுதியை எந்த ஒரு கட்டத்திலும் இழந்து விடுவார். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தவறான தகவல் தரப்பட்ட விவரம் தெரியவந்தால் விண்ணப்பதாரர் வேலையில் தொடர்வது மெட்ராஸ் |

| | |
|---|---|
| | உயர்நீதிமன்றத்தின் நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு/ நியமன அதிகாரியின் முடிவை பொருத்ததாகும். |
| ஐ | ஒவ்வொரு நீதித்துறை மாவட்டத்தில் உள்ள ஓட்டுநர் பதவிக்கு தனித்தனி அறிவிக்கைகள் வெளியிடப்பட்டிருப்பதால், விண்ணப்பதாரர்கள் அவர்கள் விருப்பப்படி ஏதாவது ஒரு நீதித்துறை மாவட்டத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எழுத்துத் தேர்வு/சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகியவை அந்தந்த மாவட்டங்களிலோ அல்லது மெட்ராஸ் உயர்நீதிமன்றம் ஆட்சேர்ப்பு பிரிவு, சென்னை நிர்ணயிக்கும் வேறு இடங்களிலோ ஒரே நாளில் நடைபெறலாம். **விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட நீதித்துறை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பின்பு, மற்றொரு நீதித்துறை மாவட்டத்திற்கு மாற்றம் செய்ய எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் ஏற்கப்படமாட்டாது.** இந்த வேலையின் தன்மையானது விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த மாவட்டத்திலேயே தங்கி பணி செய்ய கோருகிறது. ஆகையால், அவர்கள் வெளிமாவட்டத்திலிருந்து வந்து பணி செய்ய இயலாது. எனவே, விண்ணப்பதாரர்கள் நீதித்துறை மாவட்டங்களை தேர்ந்தெடுக்கும்போது கவனமாக செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |
| ஒ | தகுதி மற்றும் இனச் சுழற்சி முறையில் அறிவிக்கை செய்யப்பட்ட பதவிக்கு தேர்வர்கள் இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து தேர்வர்களின் பட்டியலினை, மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு, நியமனம் செய்யும் அதிகாரிகள் மூலமாக நியமன ஆணைகள் வழங்க வேலூர் முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். |
| ஓ | மாற்றுத்திறனாளிகள் (பார்வையற்ற மற்றும் பார்வை குறைபாடுள்ளவர்கள் தவிர), அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்பட்சத்தில், அரசு மருத்துவமனையின் மருத்துவ அதிகாரியிடமிருந்து அவர்களுடைய உடல் ஊனத்தின் தன்மையை பற்றியும், மேலும் அவர்களுடைய ஊனம், பணியை திறம்பட செய்ய தடையாயிராது என்றும் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அவர்கள் ஊனம், அவரது பணியினை திறம்பட செய்வதை தடை செய்யாது என்றும் விண்ணப்பதாரர் நியமன அதிகாரியை திருப்தி படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| ஔ | இறுதிப் பட்டியல் தயாரிக்கும்போது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களின் தகுதிகள் இணையாக அமையும்போது, விண்ணப்பதாரர் "முதன்மையான சாரணர்" விருது பெற்றிருப்பாராயின் அவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இந்திய குடியரசுத் தலைவரிடம் "முதன்மையான சாரணர்" என்ற விருதைப் பெற்றவர்) [பிரிவு 16 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016] |
| ∴ | ஆரம்ப கல்வி முதல் இவ்வறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதி வரை தமிழ் வழியில் பயின்றோருக்கு (PSTM) முன்னுரிமை வழங்கப்படும். |

**2. சம்பள விகிதம் மற்றும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை:**

| ஊதிய நிலை மற்றும் சம்பள ஏற்றமுறை | காலிப்பணியிடங்கள் |
|---|---|
| Level-8- Rs. 19,500 – Rs. 71,900/- | 01 |

**3. காலிப்பணியிடங்களின் பங்கீடு:**

| வ. எண். | வகை | காலிப்பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | GT (PRIORITY) | 1 |

குறிப்பு:- மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப் பணியிட எண்ணிக்கையானது தோராயமானது. மேலும், அவைகளின் எண்ணிக்கை இறுதியாக தெரிவு செய்வதற்கு முன் எந்த நேரத்திலும், அதிகரிக்கவோ குறையவோ கூடும்.

Abbreviations: GT- General Turn

**4. வயது (01.07.2022 அன்று உள்ளபடி):**

**விண்ணப்பதாரர்கள், 01.07.2004க்குப் பிறகு பிறந்திருக்கக் கூடாது மற்றும் 01.07.2022 தேதியில் 18 வயது நிறைவடைந்தவராக இருக்க வேண்டும்.**

| வ. எண். | விண்ணப்பதாரரின் வகை | அதிகபட்ச வயது (பூர்த்தி அடைந்திருக்கக் கூடாது) | விண்ணப்பதாரர் கீழ் குறிப்பிட்டுள்ள தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க கூடாது |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் | 37 வருடங்கள் ** | 01.07.1985 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்கள்) | 34 வருடங்கள் ** | 01.07.1988 |
| 3. | மற்றவர்கள் / (அதாவது ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்கள்) தவிர | 32 வருடங்கள் ** | 01.07.1990 |

<u>குறிப்பு</u>:-

(i) **'மற்றவர்கள்'** அதாவது ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்கள்) தவிர, எவரேனும் மத்திய/மாநில அரசுத்துறைகளில்

5 வருட பணி முடித்திருந்தால் அவர்கள் வயது வரம்பிற்குள் இருந்தாலும் அவர்கள் தகுதியற்றவர்கள் ஆவர்.

(ii) **“ஆதரவற்ற விதவை”** என உரிமை கோரும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும், (மண முறிவு பெற்றவர் நீங்கலாக) வருவாய் கோட்ட அலுவலர்/ துணை ஆட்சியர்/ உதவி ஆட்சியரிடமிருந்து, அறிவிப்பு தேதி அல்லது அதற்கு முன், “ஆதரவற்ற விதவை சான்றிதழ்” பெற்றிருக்க வேண்டும் மற்றும் உரிமை கோரும் விண்ணப்பதாரரின் குடும்ப ஓய்வூதியம் அல்லது பிற தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் ரசீதுகள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பயிற்சிகள் மூலம் கிடைக்கும் மாதாந்திர வருமானம் ரூ.4,000/-க்கு மேல் இருக்கக் கூடாது. **'விதவை சான்றிதழ்' மட்டும் வைத்திருக்கும் விண்ணப்பதாரர்கள் இந்தப் பிரிவின் கீழ் விலக்கு பெற முடியாது.**

குறிப்பு: அறிவிப்பு தேதியில் “ஆதரவற்ற விதவை சான்றிதழ்” வைத்திருக்கும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே இப்பிரிவின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

**இருப்பினும், கீழ்க்கண்ட வகை விண்ணப்பதாரர்களுக்கு மேற்குறிப்பிட்ட அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.**

(i) **மாற்றுத்திறனாளிகள் (பார்வையற்ற மற்றும் பார்வை குறைபாடுள்ளவர்கள் தவிர)*:**

தகுதிவாய்ந்த மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் (மாற்றுத்திறனாளிகளின் உடல் குறைபாட்டின் அளவு 40%க்கு கீழ் இருக்கக் கூடாது), நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பை விட பத்து வருடங்கள் வயது தளர்வைப் பெற உரிமையுடையவர்கள் ஆவார்கள். மாற்றுத்திறனாளி என்பதால் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியில் எந்த ஒரு சலுகையையும் கோராது, அப்பணியில் திறம்பட செயல்பட வேண்டும். அவ்வாறான விண்ணப்பதாரர்கள் 27.07.2018ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.28 மாற்றுத்திறனாளிகள் நலன் (டிஏப்பி 3.1) துறையின் ஆணையில் குறிப்பிட்ட படியும் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் உரிமை விதிகள், 2017ல் இந்திய அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி பெறப்பட்ட சான்றிதழினை சமர்பிக்க வேண்டும்.

[*15.06.2021 தேதியிட்ட அரசாணை நிலை எண்.225, உள்(நீதிமன்றம் - V) துறை]

(ii) **<u>முன்னாள் இராணுவத்தினர் :</u>**

**(அ)** 01.07.2022 அன்று ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் 55** வயதை நிறைவு செய்யாதிருக்க வேண்டும்.

**(ஆ)** 01.07.2022 அன்று மற்றவர்கள் அதாவது மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகளை சாராத முன்னாள் இராணுவத்தினர் 50** வயதை நிறைவு செய்யாதிருக்க வேண்டும்.

(பிரிவு 63 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016) **(முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான வரையறையை "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" பத்தி 3(g) யை பார்க்கவும்.)**

(iii) **<u>தேசிய மாணவர் படை (National Cadet Corps):</u>**

1963 ஜனவரி முதல்நாள் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் தேசிய மாணவர் படையில் (National Cadet Corps) சார்நிலை அலுவலர், பயிற்றுநர்கள் (Under Officer, Instructors) அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக வேலையில் அமர்த்தப்பட்டிருந்த தேசிய மாணவர் படையின் முன்னாள் மாணவர்கள் வயதுத் தகுதியைத் தவிர, நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தால் விண்ணப்பிக்கலாம். அவர் தேசிய மாணவர் படையில் சார்நிலை அலுவலர், பயிற்றுநர்களாக அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக எவ்வளவு காலம் பணி புரிந்துள்ளார்களோ அக்கால அளவை அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். இத்தகைய விண்ணப்பதாரர் மற்றபடி தகுதியுடையவராகக் கருதப்பட்டால் அவருக்கான வயது சம்மந்தப்பட்ட விதியில் அவர்களுக்கு சாதகமாக தளர்த்தப்படும்.

(iv) **<u>கொத்தடிமைத் தொழிலாளர்கள்:</u>**

கொத்தடிமைத் தொழில் முறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்கள்/அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களின் மகன்கள் அல்லது மணமாகாத மகள்கள், 01.07.2022 அன்று **42** வயது,** நிறைவு செய்யாதவர்களும் அறிவிக்கையில் கண்ட பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம். **<u>இணைப்பு–F-</u>**ல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் படி, அவர்கள் கொத்தடிமை தொழில் முறை (ஒழிப்பு) சட்டம் 1976-ன்படி கொத்தடிமை தொழில்முறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் என்பதற்கான சான்றிதழை,

சாதிச் சான்றிதழ் வழங்க தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்று சமர்பிக்க வேண்டும்.

(v) **அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள்:**

01.07.2022 அன்று 42** வயது நிறைவடையாத அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்/ தற்காலிக அரசுப் பணியாளர்கள், அவர்களுடைய வயதிலிருந்து அவர்கள் அரசுப்பணியில் தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்ச்சியாக அல்லாமலோ அறிவிக்கை தேதி வரை இருந்த காலத்தை கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். (பிரிவு 61 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016)

**விளக்கம்** - ஒரு விடுவிக்கப்பட்ட மாநில அரசு பணியாளர் என்பவர் மாநில அரசுப் பணியில் இருந்து பணியிடங்கள் குறைப்பு அல்லது ஒழுங்கு முறை நடவடிக்கை அல்லாத வேறேதும் காரணத்திற்காக விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

(vi) **தமிழ்நாடு நீதித்துறையில், தற்காலிகமாக வேலை செய்து கொண்டிருப்பவர்கள்/வேலை செய்தவர்கள்:**

தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணி விதி 16(a)(i)ன் படி தமிழ்நாடு நீதித்துறையில் தற்காலிக பணியில் இருக்கும்/இருந்த பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்ட தேதியன்று, அவர்கள் மேற்கூறிய வயது தகுதியை கொண்டிருப்பின், பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பு, இந்த ஒரே ஒரு ஆட்சேர்ப்புக்கு மட்டும் பொருந்தாது. ஆகவே அவர்கள் அவர்களுடைய முதல் நியமன நாள், வயது போன்ற தகவல்களை தெளிவாக சமர்ப்பிக்க வேண்டும். (இந்த சலுகையானது 30.04.2019ந் தேதியிட்ட W.P.No..6378/ 2018ல் பிறப்பிக்கப்பட்ட உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க வழங்கப்படுகிறது).

****நேரடி ஆட்சேர்ப்புக்கு, 13.09.2021 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேம்பாட்டுத் துறை(S) ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, அதிகபட்ச வயது வரம்பு இரண்டு ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.**

(vii) **தேவைக்கு அதிகமாக கல்வி தகுதியுடைய சில குறிப்பிட்ட வகை விண்ணப்பதாரர்கள் :**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு, பல்கலைக்கழகத்தின் புகுமுகத் தேர்வு (Pre-University Examination) அல்லது மேல்நிலைக் கல்வித் தேர்வு அல்லது தமிழ்நாடு அரசின் தொழில் நுட்பக் கழகம் மற்றும் பயிற்சிக்

குழுமம் அல்லது பிறமாநில அரசு அல்லது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம்/ குழுமத்தால் நடத்தும் பட்டய தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்கள்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்கள்) அல்லது அனைத்து வகுப்பினர்களையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு பொருந்தாது.

**[விளக்கம்-II, பிரிவு 20(8) தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016 பார்க்கவும்]**

**விளக்கம்** :- பல்கலைக்கழகத்தின் புகுமுகத் தேர்வில் (Pre-University Examination) அல்லது மேல்நிலைப்பள்ளித் தேர்வில் அல்லது பட்டயப்படிப்பில் இரண்டு பகுதிகளில் அல்லது ஒரு பகுதியில் மட்டும் தேறியுள்ள விண்ணப்பதாரர்கள் முழுமையாக தேர்ச்சி பெற்றவராகக் கருத இயலாது.

குறிப்பு - இருப்பினும் விண்ணப்பதாரர் அறிவிக்கை வெளியாகும் தேதியிலோ அல்லது தெரிவு பட்டியல் தயாரிக்கும் தேதியிலோ அல்லது நியமனத்தின் போதோ 60 வயது பூர்த்தி அடைந்திருக்கக் கூடாது.

5. **கல்வித்தகுதி:**

| **பதவியின் பெயர்** | **தகுதி** |
|---|---|
| ஓட்டுநர் (Driver) | எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ், சம்பந்தப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் ஓட்டுவதற்குரிய செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும், மேலும் வாகனம் ஓட்டும் முன் அனுபவம் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். |

**குறிப்பு:**

விண்ணப்பதாரர்கள் தங்களது 5 வருட கால முன்அனுபவச் சான்றிதழை சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்பிக்க வேண்டும்.

6. **தேர்வு கட்டணம்:**

| வ. எண். | வகை | தொகை |
|---|---|---|
| (i) | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்)/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்/மற்றவர்கள். | ரூ.500/- |
| (ii) | ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர் (தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே கட்டண விலக்கு பொருந்தும்) | முழு விலக்கு |
| (iii) | மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வகுப்பினைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள்<br>a) மாற்றுத்திறனாளிகள், 40 சதவிகிதத்திற்கு குறைவாக ஊனம் கொண்டிருக்கக்கூடாது. (அனுமதிக்கப்பட்ட ஊனங்கள்)<br>b) ஆதரவற்ற விதவைகள் பொறுத்தவரை, "ஆதரவற்ற விதவை சான்றிதழினை" வருவாய் கோட்டாட்சியர்/சார் ஆட்சியர்/உதவி ஆட்சியரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். | முழு விலக்கு |

**குறிப்பு :**

| | |
|---|---|
| 1 | மேற்கண்ட வயது, கட்டணச் சலுகை, இன இடஒதுக்கீடு மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மற்ற இடஒதுக்கீடு உள்ளிட்ட வேறு சலுகைகளைக் கோரும் விண்ணப்பதாரர்கள் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட முறையான சான்றிதழ்களை அறிவிக்கை தேதியில் பெற்று இருத்தல் வேண்டும். மேலும் அச்சான்றிதழ்களை இணையதள வழியாக விண்ணப்பிக்கும் போது பதிவேற்றம் செய்தல் வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், கேட்கும்போது அத்தகைய சான்றிதழ்களின் அசலை சரிபார்ப்பதற்கு சமர்ப்பிக்க வேண்டும். இல்லையெனில், அவர்களுடைய விண்ணப்பங்கள் தேர்வு நடவடிக்கையின் எந்த நிலையிலும் நிராகரிக்கப்படும். மேலும் இது சம்மந்தமாக எந்த கோரிக்கையும்/கடிதப் பரிமாற்றமும் ஏற்கப்படமாட்டாது. |
| 2 | கட்டணச்சலுகை, இட ஒதுக்கீடு மற்றும் வயது தளர்வு ஆகியவற்றை பெறுவதற்காக, தவறான தகவல் அளிக்கும் விண்ணப்பதாரரின் |

| | |
|---|---|
| | விண்ணப்பம் தேர்வு நடவடிக்கையின் எந்த நிலையிலும் நிராகரிக்கப்படும். |
| 3 | ஒருமுறை செலுத்தப்பட்ட கட்டணம், எந்த சூழ்நிலையிலும் திரும்ப தரப்படவோ அல்லது வேறு பதவிக்கான தெரிவுகளில் சரிசெய்து கொள்ளப்படவோ மாட்டாது. |

7. **பணி அளிக்கப்படும் இடம்:**

(அ) தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தில் பணியமர்த்தப்படுவார்கள், இருப்பினும் தேர்வு செய்யப்பட்ட பணியாளர்கள் எந்த ஒரு நேரத்திலும் நிர்வாக காரணங்கள், தேவை மற்றும் அவசிய நிமித்தம் காரணமாக ஒரு நீதிமன்றத்தின் அலுவலகத்திலிருந்து மற்றொரு நீதிமன்ற அலுவலகத்திற்கு மாற்றப்படுவார்.

(ஆ) மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தேர்வு செய்யப்படும் அனைத்து பணியாளர்களும் தங்கள் மேலதிகாரிகள் அவ்வப்போது வழங்கும் அனைத்து பணிகளையும் விடுமுறை மற்றும் பணிநேரம் கடந்த நிலையிலும் அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும்.

8. **தேர்வின் தன்மை:**

அ)எழுத்துத்தேர்வு (கொள்குறிவகை) (OMR முறை) (100 மதிப்பெண்கள்) மற்றும் ஆ)செய்முறை தேர்வு (50 மதிப்பெண்கள்) அடிப்படையில் விண்ணப்பதாரர்கள், தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**(அ) எழுத்துத்தேர்வு:**

எழுத்துத்தேர்வு பகுதி-அ (Part-A) மற்றும் பகுதி-ஆ (Part-B) என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

| **பாடம்** | **மொத்த வினாக்கள்** | **மொத்த மதிப்பெண்கள்** | **குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள்** | **கால அளவு** |
|---|---|---|---|---|
| பகுதி அ<br>தமிழ் மொழி தகுதித் தேர்வு (எட்டாம் வகுப்பு வரை உள்ள தமிழ்நாடு அரசு பாடத்திட்டம்) | 50 | 50 | 20 | **2 மணி நேரம்** |
| பகுதி ஆ<br>பொது அறிவு | 50 | 50 | 20 | |

<u>பாடத்திட்டம்:</u>

<u>பகுதி-அ</u>: பொது தமிழ் (எட்டாம் வகுப்பு வரை உள்ள தமிழ்நாடு அரசு பாடத்திட்டம்)

<u>பகுதி-ஆ</u>: பொது அறிவு, பொது விழிப்புணர்வு, ஓட்டுநர் கோட்பாடு, வாகனத்தை இயக்குவதற்கு முன்பான சோதனை, குறியீடுகள், சில வாகனங்களுக்கான முன்னுரிமை, போக்குவரத்துக் கல்வி, வாகன இயக்கவியல் மற்றும் பழுதுபார்த்தல், ஓட்டுநருக்கான நற்பண்புகள், எண்கணிதம் மற்றும் காரணம் அறியும் திறன், ஓட்டுநர் திறமை, ஓட்டுநர் உணர்வு, முதலுதவி, அவசர சிகிச்சை மற்றும் பிற.
(தேர்வு வினாத்தாள் தமிழ் மொழியில் மட்டுமே இருக்கும்)

<u>குறிப்பு:</u>

(i) பகுதி 'அ' (Part – A) மற்றும் பகுதி 'ஆ' (Part – B)ல் உள்ள கேள்விகள் தமிழில் மட்டுமே கேட்கப்படும்.

(ii) விண்ணப்பதாரர்கள் பகுதி 'அ' (Part-A) இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களான 40% (அதாவது 20 மதிப்பெண்கள்) பெற்றிருந்தால் மட்டுமே பகுதி 'ஆ' (Part – B) மதிப்பீடு செய்யப்படும்.

(iii) செய்முறைத் தேர்விற்கு, தேர்வர்களை தேர்வு செய்வதற்கு பகுதி 'அ' (Part-A) மற்றும் பகுதி 'ஆ' (Part-B) ஆகியவற்றில் பெறப்படும் மொத்த மதிப்பெண்கள் இடஒதுக்கீட்டு விதியின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

<u>(ஆ) செய்முறைத் தேர்வு(50 மதிப்பெண்கள்)(குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்- 20)</u>

(i) செய்முறைத் தேர்வுக்கு எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் , 1:3 என்ற விகிதத்தில் அல்லது மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவினால் நிர்ணயிக்கும் விகிதப்படி, விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவார்கள். இருப்பினும், ஒவ்வொரு இடஒதுக்கீடு குழுவிலும், ஒரே மதிப்பெண்ணைப் பெற்ற அனைத்து தேர்வர்களும் செய்முறைத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) செய்முறை தேர்வின் முறை மற்றும் தேதி, தேர்ச்சிப்பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். செய்முறைத் தேர்வு, சென்னையிலோ அல்லது மெட்ராஸ் உயர்நீதிமன்றம் ஆட்சேர்ப்பு பிரிவு முடிவு எடுக்கும் வேறு இடத்திலோ நடைபெறும்.

9. **<u>தேர்வுப் பட்டியல் தயாரித்தல் :</u>**

(i) எழுத்துத் தேர்வின் [பகுதி- அ (Part-A) மற்றும் பகுதி- ஆ (Part-B)] மற்றும் செய்முறைத்தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையிலும், தகுதி மற்றும் இடஒதுக்கீட்டு விதிமுறையை பின்பற்றியும் தேர்வானவர்களின் இறுதி பட்டியல் தயாரிக்கப்படும்.

(ii) இறுதித் தேர்வுப் பட்டியல், இடஒதுக்கீடு மற்றும் தகுதி அடிப்படையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆட்சேர்ப்பு இணைய முகப்பில் (Madras High Court Recruitment Portal) பதிவேற்றம் செய்யப்படும்.

**சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதி, அசல் ஆவணங்கள்/ சான்றுகளை ஆய்வு செய்து சரிபார்த்த பிறகு, இறுதியாக தகுதியான தேர்வர்கள் குறித்து முடிவு செய்யப்படும்.**

10. **<u>தேர்வு நடைபெறும் இடங்கள்:</u>**

(i) எழுத்துத் தேர்வு, வேலூர் நீதித்துறை மாவட்டத்திற்குள்ளோ அல்லது மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவு முடிவு எடுக்கும் வேறு இடத்திலோ நடத்தப்படும்.

(ii) எழுத்துத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் செய்முறைத் தேர்வு நடைபெறும் தேதி பற்றிய விவரம், தகுதியான தேர்வர்களுக்கு உரிய நேரத்தில் மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவின் <u>https://www.mhc.tn.gov.in</u> இணையதளம் வாயிலாக மட்டுமே தெரிவிக்கப்படும். <u>மாறாக தபால் மற்றும் கூரியர் வாயிலாக விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படமாட்டாது.</u> ஆகவே மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு இணையதளத்தில் வெளியிடப்படும் தகவல்களை பின்பற்றும்படி விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(iii) எழுத்துத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் செய்முறைத் தேர்வில் பங்கேற்கும் விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித பயணப்படியோ, தினப்படியோ வழங்கப்படமாட்டாது.

11. **<u>விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்</u>**:

(i) **<u>இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள</u>** "**<u>விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான அறிவுரைகள்</u>**", இவ்வறிக்கையின் ஒரு பகுதியாகவே கருதப்படும். விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு முன், இணையதளத்தில் இருக்கும் "அறிவிக்கை"

மற்றும் "விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான அறிவுரைகள்" முழுமையாகவும் கவனமாகவும் படித்த பின், தாங்கள் பணி நியமனத்திற்கு தேவையான தகுதிகளை பெற்றிருக்கிறோம் என்பதையும், பணி நியமனத்திற்கு தகுதியற்றவர்கள் அல்ல என்பதையும் உறுதி செய்த பின் பூர்த்தி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ii) விண்ணப்பதாரர்களுக்கான "அறிவிக்கை" மற்றும் "விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான அறிவுரைகள்" ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் ஆங்கில பதிப்பே இறுதியானது.

**மெட்ராஸ் உயர்நீதிமன்றம், சென்னை** **பா. தனபால்**

**தேதி: 24.07.2022** **தலைமைப் பதிவாளர்**